# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 18.04.2026**

**OS No. : 315/2021**

**Dw : 4**

**Name : திரு. மதார் மைதீன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி அனிபா என் தகப்பனார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி ஜவஹர் அலி எனது சகோதரர் என்றால் சரிதான். எனக்கு சாகுல் ஹமீது, முகமது ஜின்னா என மேலும் 2 சகோதரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 16.02.2009 மற்றும் 07.08.2009 ஆகிய கிரைய ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 29.08.2021ம் தேதி எனது அப்பாவும் வாதியும் ஒரு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரைய ஒப்பந்தம் போடவில்லை என குறிப்பிட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது அப்பா எந்த தேதியில் எனக்கும் எனது சகோதரர்களுக்கும் சொத்துக்களை பாகம் செய்துகொடுத்தார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் 2008ம் வருடம் பாகம் செய்துகொடுத்தார். என்னுடைய பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் எவை என்றால் என் அப்பாவிடம் நான் கிரையம்தான் வாங்கினேன். என்னுடைய சகோதரர்களுக்கும் என் அப்பா பாகம் செய்துகொடுக்கவில்லை. என் அப்பாவிற்கு பணத்தேவை இருந்த காரணத்தினால்தான் அவருக்கு சொந்தமான

சொத்துக்களை கிரையம் செய்ய முயன்றார் என்றால் சரிதான். அதன் காரணமாகத்தான் 29.08.2021ம் தேதி வாதியுடன் எனது தகப்பனார் சொத்தினை விற்க கிரையம் பேசி ஒரு கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதே தேதியில் கிரைய முன்பணமாக 20 லட்ச ரூபாயை என் தகப்பனார் பெற்றுக்கொண்டு 5 லட்ச ரூபாயை கிரையம் முடிக்கும் தேதியில் பெற்றுக்கொள்வதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

2) நான் என் அப்பாவிடம் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 560/13 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 66 சென்ட் ஆகும். நான் அதில் 33 சென்ட் நிலத்தை கிரையம் முடித்தேன். புல எண். 560/13 இடத்தை வேறு யாருக்கேனும் எங்கள் தகப்பனார் கிரையம் கொடுத்தாரா என்றால் 560/12 இடத்தை மட்டும் வேறொரு நபருக்கு கிரையம் கொடுத்தார். சரவணன், ஹரிஹரன் ஆகியோருக்கு எனது தகப்பனார் பதிவுசெய்யப்படாத ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார் என எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 560/12ல் உள்ள ஒரு பகுதி சொத்தை சரவணனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார். சர்வே எண். 560/13ல் உள்ள சொத்தை பொறுத்து ஹரிஹரனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார். 28.09.2021ம் தேதி என்னுடைய தகப்பனார் வாதியுடன் கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்னரே சரவணன் மற்றும் ஹரிஹரனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பாவின் அசல் கிரைய பத்திரம் தற்போது எங்கள் கைவசம் கிடையாது. அந்த அசல் பத்திரங்கள் வாதி ஷாஜகான் கைவசம் உள்ளன என்றால் சரிதான். எனது தகப்பனாரும் வாதி ஷாஜகானும் கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டதன் அடிப்படையில்தான் அவரிடம் எனது அப்பாவின் அசல் பத்திரங்கள் ஒப்படைக்கப்பட்டன என்றால் சரியல்ல.

3) எனது தகப்பனார் செங்கோட்டையில் பிலால் பரோட்டா ஸ்டால் நடத்திவருகிறார் என்றால் சரிதான். அந்த கடையில் நானும் எனது

சகோதரர்களும் சம்பளத்திற்கு வேலை செய்கிறோம் என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் மேற்படி ஓட்டலை நடத்திவருகிறோம். நான் என் தகப்பனாரிடம் 33 சென்ட் நிலத்தை 6 லட்ச ரூபாய்க்கு கிரையம் முடித்தேன். 17.09.2021ம் தேதிய கிரைய ஆவணத்தில் ரூ.2,36,000/-க்கு கிரையம் முடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் 6 லட்ச ரூபாய் கொடுத்தேன். அதே தேதியில் எனது சகோதரர் ஜவஹர் அலி எனது அப்பாவிடம் 4 லட்ச ரூபாய் கொடுத்து அவர் பெயரில் கிரையம் பெற்றார். ஆனால் ஜவஹர் அலி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் ரூ.1,76,000/-க்கு கிரையம் முடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.09.2021ம் தேதியன்று எனது அப்பாவிடம் சொத்துக்களின் அசல் ஆவணங்கள் அவர் கைவசம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் ஆவணங்களை 17.09.2021 அன்று காட்டாமலேயே பத்திரப்பதிவு அதிகாரிகளின் துணையோடு மோசடியாக எங்கள் பெயரில் கிரைய ஆவணங்கள் உற்பத்திசெய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஷாஜகானின் கைவசம் உள்ள அசல் ஆவணங்களை திரும்ப பெற நாங்கள் சட்டப்பூர்வ நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், வாதி ஷாஜகானும் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் பெறப்பட்ட 20 லட்ச ரூபாய் முன்பணத்தை திரும்ப தராமல் மோசடி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் எனது பெயரிலும், எனது சகோதரர்களின் பெயரிலும் போலியான கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றால் சரியல்ல.

4) பி.வா.சா.2 ஜாகீர் உசேனின் உறவினரை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பா ஏற்படுத்திக்கொடுத்த பிற கிரைய ஆவணங்களிலும் மேற்படி ஜாகீர் உசேன்தான் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை சம்பந்தமாக ஜாகீர் உசேன் எங்களுக்கிடையே சமரசம் பேச முயற்சி செய்ததாக ஜாகீர் உசேன் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எந்த தேதியில் அவ்வாறு சமரசம் பேசினார்

என்றால் எனக்கு நினைவில்லை. அந்த சமயத்தில் ஜாகீர் உசேன் வீடியோ எடுத்தாரா என்பது குறித்து எனக்கு தெரியாது. எங்கள் வீட்டில் வைத்து வீடியோ எடுக்கப்பட்டதாக ஜாகீர் உசேன் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வீடியோவில் நான், எனது தகப்பனார், வாதி ஷாஜகான் மற்றும் ஜாகீர் உசேன் ஆகியோர் உள்ளோம் என்றால் சரிதான். நான் சொல்லித்தான் ஜாகீர் உசேன் மேற்படி வீடியோவை பதிவுசெய்தார் என்றால் சரியல்ல. எத்தனை பதிவுகள் செய்தார் என்றால் ஒரு வீடியோ பதிவு மட்டும் செய்தார். மேற்படி வீடியோவில், நம்முடைய டாக்குமென்ட் ஷாஜகானின் கைவசம் உள்ளதாகவும் அதைத்தான் நாம் கேட்கிறோம் என்று எனது அப்பா பேசியது பதிவாகியுள்ளது என்றால் சரிதான். ஷாஜகானிடம் வாங்கிய தொகையை கொடுத்து கணக்கை முடித்துவிடுங்கள் என ஜாகீர் உசேன் சொல்வதும் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. அந்த வீடியோவில் நான் யாரிடமோ செல்போனில் பேசியதுபோல் பதிவாகியுள்ளது என்றால் அது குறித்து எனக்கு நியாபகமில்லை. பணத்தை கொடுத்து டாக்குமென்ட்டை வாங்கிவிடுவோம் என நான் போனில் பேசியதும் அந்த வீடியோவில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அந்த வீடியோவில் நாங்கள் சீட்டு சம்பந்தமாக பேசியதாக எந்த ஒரு காட்சியும் இல்லை என்றால் சரியல்ல, நாங்கள் சீட்டு சம்பந்தமாகத்தான் பேசினோம். சீட்டு சம்பந்தமாக எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை என்றும், வாதியிடம் வாங்கிய அட்வான்ஸ் தொகை குறித்து மட்டுமே பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரியல்ல. சீட்டுசம்பந்தப்பட்ட எந்தவொரு விவரமும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் கிரையம் முடிக்கப்பட்டவுடன் நாங்கள் அந்த சொத்துக்களை வேற நபர்களுக்கு மறுகிரையம் கொடுத்துவிட்டோம் என்றும், அவை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 2023 ல் நடந்தவை என்றால் சரிதான்.

5) என் அப்பாவுக்கும், வாதிக்கும் இடையே முறையான கிரைய ஒப்பந்தம் இருந்த சமயத்தில் எங்கள் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்கள்

மோசடியானவை என்றும், எனவே நாங்கள் கிரைய ஒப்பந்தத்தின் படி வாதிக்கு மீதி தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் முடித்துத்தர கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி மீதி தொகையான 5 லட்சத்தை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த பணத்தை பெற்றுக்கொண்டு நாங்கள் கிரையம் முடித்துத்தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிராதில் 3 சொத்துக்கள் காட்டப்பட்டுள்ள நிலையில் நாங்கள் ஒரு சொத்தினை பொறுத்து மட்டுமே கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், இவ்வழக்கு வாதியின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi